தன்மையைக் காட்டும் பெயரால் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப் படும் மருந்துகள் அதிகமான மருத்துவமனைகளில் அரசாங்க முறையிலே பெரும்பாலும் பயன்படுகிறது. ஆகவே, அந்த வகையிலே கட்டுப்படுத்த முடியும். குறைபாடுகள் இருந்தால் அவ்வப்பொழுது கண்டுபிடிக்கப்படு கிறது.

Thengapattinam-Kollengode Boat Service

* 377 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have examined the feasibility of operating mechanised boat service in the back waters of Thengapattinam to Kollengode for purposes of transportation ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, தேங்காப்பட்டிணம் குளித்தலை ஆறு கடலில் சேரும் இடம். ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்குப் போவதற்கான பாலம் இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது சாதாரண போட் ஓடுகிறது. தேங்காப்பட்டிணத்திலிருந்து கொல்லங்கோடு செல்லும் ஏ.வி.எம். கால்வாயில் மெகானைஸ்ட் போட் விடுவதாக இருந் தால் அது டூரிஸ்ட் சென்டராக ஆகும். போக்குவரத்து வசதியும் அதிகம் இருக்கும். ஆகவே, இதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் அந்த வாய்க்கால் முழுவதும் மண்மேடிட்டு இருப்பது என்பது உண்மை. மண் மேடிட்டிருப்பதைச் சுத்தப்படுத்த வேண்டும். மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை ஆராயச் சொல்லியிருக்கிறோம். வாய்க்கால் ஓரமாகப் பாதை ஒன்று போவதால் போக்குவரத்துத் தடைப்படாமல் இருக்கிறது. ஆகவேதான் இவ்வளவு காலமாகத் தள்ளிப் போடப்பட் டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் தலைமைப் பொறி யாளரிடத்திலே கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வாய்க்காலைச் சுத்தப் படுத்துவதன் மூலம் பொருளாதார மிச்சம் எவ்வளவு கிடைக்கும் என்று ஆராய்ந்து அறிக்கை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

Velanganni Road

* 378 *Q.*—THIRU A. RAJAMANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to convert the present B.T. road from Velanganni Arch to the Church into an asphaltic concrete road ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

1975 மார்ச் 19]

திரு. அ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அங்கே போக்குவரத்து அதிகமாக இருப்பதால் அந்தச் சாலை அடிக்கடி பழுதுபடுகிறது. ஆகவே மறுபரிசீலனை செய்து அந்தச் சாலையை அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது ஏனைய மாவட்ட சாலையின்கீழ் வரக்கூடிய ஒன்று. 'Other than road works' அந்தத் திட்டத்தின்கீழ் பணம் சென்ற ஆண்டு ஒதுக்கப்படவில்லை. இதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. சுற்றுலாத் துறை இதை ஏற்க வேண்டுமென்று கேட்டதற்கு, சுற்றுலாத் துறையினர் வேறு பணம் ஒதுக்க இயலாது என்று அந்தத் துறையிலே தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலனை செய்கிறது.

மோகனூர், காட்டுப்புத்தூர் கால்வாய்கள்

*379 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மோகனூர், காட்டுப்புத்தூர் ஆகிய கால்வாய்களை இணைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கோடைகாலத்தில் காட்டுப்புத்தூர் வாய்க்காலில் வரும் தண்ணீர் வரத்து குறைந்துகொண்டே இருக்கிறது. ஆனால் மோகனூர் வாய்க்காலில் எப்பொழுதும் தண்ணீர் வருவது அதிகமாக இருக்கிறது. எனவே, இந்த இரண்டையும் இணைத்தால் பல ஆயிரம் ஏக்கர்கள் பயன் அடையும். இருக்கின்ற பயிரிடும் தலத்தையும் பாதுகாக்க முடியுமே. எனவே, இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இரண்டையும் இணைத்தால் அந்தத் தண்ணீரைக் கொண்டு அதிக அளவு பாசனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் காவிரியிலேயே தண்ணீர் எவ்வளவு வர வேண்டுமென்று பிரச்சினை இருக்கிறது. எனவே, இதைப்பற்றி இப்பொழுது யோசிப்பதற்கு நேரமில்லை.

Import of Wheat

*380 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for; Food and Co-operation be pleased to state